# மஹா சிவராத்திரி சிறப்பு வழிபாடு அழைப்பிதழ்
## (15-02-2026 - ஞாயிற்றுக்கிழமை)





## அரியத்துறை மரகதவல்லி சமேத ஸ்ரீ வரமூர்த்தீஸ்வரர் திருக்கோவிலில் வரமூர்த்தீஸ்வரர் வழிப்பாட்டுக் குழுவினரால் நடத்தப்படும் 37 ஆம் ஆண்டு மஹா சிவராத்திரி அபிஷேக ஆராதனை

| | | | |
|---|---|---|---|
| முதல் காலம் (மாலை 6 முதல் 9) | ,இரண்டாம் காலம் (இரவு 10 முதல் 11) | மூன்றாம் காலம் (இரவு 12 முதல் 1) | நான்காம் காலம் (மறுநாள் காலை 4 முதல் 6 வரை) |

ஸ்ரீ வரமூர்த்தீ க்ஷேத்திரமாம் அரியத்துறையில் கடந்த பல வருடங்களாக சிவராத்திரி மற்றும் நவராத்திரி விசேஷங்களை செய்யும் வரமூர்த்தீஸ்வரர் வழிபாட்டுக் குழு இந்த வருடம் 37வது வருடமாக மஹா சிவராத்திரி ஆராதனை செய்ய இருக்கிறது.

பிரம்மாரண்ய நதி என்று போற்றப்படும் ஆரணி நதியின் வடகரையில் அமைந்துள்ள ஐந்து சிவாலயங்களில் ஒன்றான அரியத்துறையில் சர்வேஸ்வரன் சுமார் 6000 வருடங்களாக சத்யோசாத வடிவங்கொண்டு ஸ்ரீ வரமூர்த்தீஸ்வரர் என்ற பெயருடன் சிறப்பாக விளங்குகிறார்.

கல்ப கோடி காலமாக வாழ்ந்து வரும் ரோம (ரோமேசர்) மகரிஷியால் இவ்விறைவன் பூஜிக்கப்பட்டு இருக்கிறார். அத்திரி அனுசுயா தம்பதியனரின் மகனான முகுந்த ரிஷியால் நூறு வருட காலம் இவ்விறைவன் அபிஷேக ஆராதனை கண்டிருக்கிறார். இவ்விரு மகரிஷிகளும் இத்தலத்திற்கு வரும் அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

சித்திரசேனன் என்ற மன்னனுக்கு பார்வதி தேவி புதல்வியாக கிடைக்கப்பெற்று மரகதவல்லி என்ற பெயருடன் வளர்ந்து சுயம்வர நாளன்று வரமூர்த்தீஸ்வரரால் சமயத்தில் காப்பாற்றப்பட்டு அவரை மணந்ததால் இத்தலத்தில் செய்யப்படும் விவாஹ பிரார்த்தனைகள் கட்டாயம் நிறைவேறும். பல பெண்களுக்கு இப்பிரார்த்தனையால் திருமணங்கள் நிறைவேறி உள்ளது.

பக்தர்கள் வேறு ஏதாவது கோரிக்கை நிறைவேற இத்தலத்தில் ஓரிரவு தங்கி காலையில் முகுந்தன் பொருட்டு இத்தலத்தில் தோன்றி கங்கையில் நீராடி இறைவனுக்கு அபிஷேக ஆராதனை செய்தால் கேட்ட வரங்களை ஈந்திடுவார் இந்த வரமூர்த்தீஸ்வரர், இது சத்தியம்! நிச்சயம்!

மேலும் இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற இந்த மூன்றிலும் சிறந்து விளங்குகின்றது. எனவே பக்தர்கள் இந்த தலத்தில் செய்யப்படும் 37வது ஆண்டு மஹா சிவராத்திரி சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டு ஸ்ரீமரகதவல்லி சமேத ஸ்ரீ வரமூர்த்தீ ஈஸ்வரரின் அருளுக்கு பாத்திரமாவீர்களாக.

கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் நபர் ஒன்றுக்கு ரூ. 1000/- கொடுத்து முன்கூட்டியே குழுத்தலைவரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டப்படுகிறார்கள். இதில் 4 கால அபிஷேகம், அலங்காரம், வஸ்த்திரம், மாலை, அர்ச்சனை, ஆராதனை மற்றும் போக்குவரத்து (வேன்) செலவு அடங்கி உள்ளது.

**சிவராத்திரி முழுவதும் ஸ்ரீமதி வசந்தி அவர்கள் தலைமையில் பெரம்பூர் கீதகோவிந்த மண்டலியரின் பஜன் நடைபெறும்**

**கீழ்கண்ட விலாசத்திலிருந்து வேன் கிளம்பும்.**

காலை 10.00 மணி - எண். 3, 3வது மெயின் ரோடு,
திருப்பதி நகர், கொளத்தூர்.

அன்புள்ள
ஸ்ரீ வித்யா பூஷணம்
வித்யாபுத்திரன் **V.R. ராஜா**
(குழுத்தலைவர்)
Cell : 9840390895

# அபிஷேகப் பொருள்களும் அருளும் பலன்களும்

தண்ணீர் அபிஷேகம் ... மனச்சாந்தி
பஞ்ச கவ்யம் ... ஆத்மசுத்தி, பாவநிவர்த்தி
நல்லெண்ணை ... பக்தி
சந்தனாதித்தைலம் ... சுகம்
வாழைப்பழம் ... பயிர் விருத்தி
மாம்பழம் ... சகல வசியம்
பலாப்பழம் ... உலக வசியம்
திராட்சைப் பழம் ... பயம் நீங்குதல்
மாதுளம் பழம் ... பகை நீக்கம்
தம்பரத்தம் பழம் ... பூமி லாபம்
நாரத்தம் பழம் ... நல்லபுத்தி
தேங்காய் திருவல் ... அரசுரிமை
சர்க்கரை ... பகையை அழித்தல்
பஞ்சாமிர்தம் ... தீர்க்காயுள்
தேன் ... சங்கீத (இசை) வன்மை
நெய் ... மோட்சம்
பால் ... ஆயுள் விருத்தி
தயிர் ... சந்தான (மக்கள்) விருத்தி
எலுமிச்சம்பழம் ... யமபயம் நீக்கம்
இளநீர் ... நல்ல புத்திரப்பேறு
கருப்பஞ்சாறு ... சாஸ்த்திர தேர்ச்சி
வாசனைத்திரவியம் ... ஆயுள் வலிமை
மஞ்சள் பொடி ... ராஜவசியம்
நெல்லி முள்ளிப்பொடி ... நோய் நீக்கம்
அன்னம் ... தேகம் அபிவிருத்தி
கஸ்தூரி ... வெற்றி உண்டாகுதல்
கோரோசனை ... ஜபம் சித்திக்கும்
விபூதி ... ஞானம்
பச்சை கற்பூரம் ... பயம் நீங்குதல்
சந்தனம் ... செல்வம் சுவர்க்கபோகம்
பன்னீர் ... வாழ்வு வளமாக
வலம்புரி சங்கு ... தீவினை நீங்கும்
சொர்ணம் (தங்கம்) ... வைராக்கியம்
சஹஸ்ரதாரை ... லாபம்
கும்பம் (ஸ்நபனம்) ... அஸ்வமேத யாகப்பலன்
வஸ்திரம் ... ராஜயோகம்
புஷ்பம் ... மகிழ்ச்சி
அரிசி மாவு ... கடன் தொல்லை நீங்கும்